214

214

18 MAY 1945

எந்நூலுக்கும் இந்நூலே மூலம்

(ஐந்தாவது அத்தியாயம்)

பேரறிவு

[இரண்டாம் பதிப்பு.]

ஞானவள்ளல்

பரஞ்ஜோதி மஹான்

அருளியது.

பரிபூரண பரஞ்ஜோதியின்

உயர்ஞான சபையோரால்

வெளியிடப்பட்டது.

மதுரை ராஜேஸ்வரி பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

உரிமைப் பதிப்பு. (ACT XXI of 1860) ஏப்ரல் 1945.

(Copy Right Reserved)



GNANAVALLAL PARANJOTHI MAHAN.

ஞானவள்ளல்

பரஞ்ஜோதி மஹான்

481·48



கவனிப்பு.

உலக நல்லடியார்களே! பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை, ஞானவள்ளல் பரஞ்சோதி மஹான் அவர்களால் மதுரையில் ஸ்தாபிக்கப்பெற்று 1942ஷு மேமீ 18உ 1860ம் வருஷத்திய (Societies Act XXI) சட்டப்படி ரிஜிஸ்தர் செய்யப்பெற்றது. நன்மைக்கு ஆளாவோர் நாளுக்குநாள் பெருகி பல ஊர்களில் கிளைச்சபைகளும் ஏற்பட்டுள்ளன. சென்னையில் மூன்று சபைகளும், பம்பாயில் ஒரு சபையும், அருப்புக்கோட்டையில் ஒரு சபையும் இதுவரை நிறுவப்பெற்றுள்ளன.

தன்னைத்தான் அறிந்து, தன் சக்தியை அபிவிருத்தி செய்து, அன்றாட வாழ்க்கையில் பிரயோகித்து, பேரின்பமாய் பிறவியின் பெரும் நோக்கை முடித்து, ஐக்கிய முத்தி அடைவது இச்சபையின் நோக்கம்.

"இருளே பூரணம் - உயிர் இருப்பது இருளில் - உயிராயிருப்பது நினைவு - உயிரின் ஒத்தாசையாயுள்ளது தன் தொனி - உயிரின் பொருளாயுள்ளது அக்கினி அல்லது ஜோதி - உயிரின் நிர்வாகி அறிவு - அடக்கமும் அணுவில் - விரிந்ததும் அணுவால் - அறிந்ததும் அணுவினுள் ஆதி மெய்யுணர்வால்." என்பது இச்சபையின் தத்துவம்.

25 வயதிற்குமேல் 70 வயதுக்குட்பட்டவர்கள் பெரிதும் இல்லறவாசிகளாயும் திடகாத்திரமேனி உள்ளவராயும் சீரத்தீங்கற்றவராயும் இருந்து சபையின் 10 நிபந்தனைகளின்படி நடந்துகொள்பவர்கள் இச்சபையில் அங்கத்தினர்களாகச் சேரலாம்.

அறிவாளிகளே! அதிதீவிரப்படுவீர்களாக.

இங்ஙனம்,

பரிபூரண பரஞ்சோதியின் உயர்ஞான சபையார், மதுரை.

B. சுந்தரராஜன்,

காரியதரிசி.

R65

பேரறிவு



ஞானவள்ளல் பரஞ்சோதி மஹான் அவர்கள் அருளிச்செய்த பிரசங்கப் பொன் மொழிகள்:—

நெற்றியும் கடந்தோம், அப்பாலுக்கப்பாலும் சென்றோம், அங்குள்ள அதிசயத்தைக் கண்ணறிவால் கண்டோம், கண்டு கண்டு விண்டோம், விண்டு விண்டு அதனுட் புகுந்தோம், புகுந்து நின்றுறுய்ந்தபோது, அறிவின் தெளிவே பிறவியில்லாப் பெருநெறியாகும்.

அறிவின் அறிவால், அறிவின் தெளிவே, தெளிவிலும் தெளிவாய்த்தேர்ந்தது ஞானம், ஞானமே உணர்வு, உணர்வே உயர்வு, உயர்வே உணர்வு, உணர்வை உணர்வது உங்களின் அறிவு.

நான் ஆதியில் இருளைப்பற்றிப் பேசினேன், பின் ஆதி, நாதம், சோதி அல்லது அக்னி, ஆயிரத்தெட்டு மலர் முதலியவைகளைப்பற்றிப் பேசினேன். இது ஒவ்வொருவருக்கும் ஞாபகம் இருக்கலாம். ஆனால் இன்று பேசப்போவது நமது அறிவாகிய பேரறிவைப்பற்றி.

இருளையும், ஆதியையும், அதன் தன் தொனியையும், அருட்பெருஞ்சோதி என்னும் அக்னியையும், ஆயிரத்தெட்டு மலரையும் அறிந்தது எது? அதுதான் **ஆக்கினை ஸ்தானத்தைக் கடந்ததும்,** நம்முள் பொக்கிஷமாயுள்ளதுமான நமதறிவு.

அறிவு பிறந்தது எப்படி யெனில், நம் ஆதி தன் தொனியோடு சேர்ந்து, மோகித்த மோகத்தின் வேகமே அக்னி சொரூபமாகிச் சொரூபமாய் விளைந்ததின்பின் அச்சொரூபத்தில் அமர்ந்தது. அமர்ந்தது எது? ஆதியென் னும் நம் சக்தியே அச்சொரூபத்தில் அமர்ந்ததின் பின், நிம்மதியும், நிரந்தரமானதுமான சந்தோஷப் புன்சிரிப்பால் ஆயிரத்தெட்டு மலராக விரிந்தது. அம்மலரில்தான் அறிவு பிறந்தது.

அதுவும் நம் ஆதியின் ஏக்கம்தான். இந்த அறிவின் அழகும், பிரகாச ஜொலிப்பும் சொல்லமுடியாத சொல் லுக்குள் உள்ளது. அதையும் அன்றும், இன்றும் சொல்லி முடிக்கத்தான் வேண்டியதாயிற்று. அறிவு பிறந்த பின் தான் நாம் நமது ஆதியின் எக்கத்தை முடித்துவிடலாம் என்று தைரியங்கொண்டோம்.

அறிவின் இருப்பிடம் எங்கு? அது இருப்பது ஆயிரத்தெட்டு மலரில். ஆயிரத்தெட்டு மலர் என்பது என்ன என்று அறிந்துகொள்ள வேண்டுமானல், அது உண்மையில் மலர் போன்று, பல வர்ணங்களோடு கூடிய பிரகாசம். அருட்பெருஞ்சோதி அல்லது அக்னியின் விசிறுதல் அல்லது ஒளியின் எழுச்சியே ஆயிரத்தெட்டு மலராகும். இதில்தான் அறிவு பிறந்தது. அறிவின் பிறப்பும் இருப்பும் ஆயிரத்தெட்டு மலரில்தான். மலரின் ஒவ்வொரு இதழுக்கும் ஒவ்வொரு பேரறிவு உண்டு. இந்த அறிவுக்குக் கீழ்ப்பட்டுப் பல அறிவுகள் உள்ளன. அவைகள் பலவேறு பாகு பாடுகளை உடையன. இந்த

அறிவுகளுக்குள்ளும், தாரதம்யம் அநேகமுண்டு. பிறகு எல்லாம் பேரறிவில் அடக்கமே. பேரறிவின் முடிவு ஆயிரத்தெட்டு மலரில்.

இதை உணர்ந்து மாயைப் பிசாசுகளைக் களைந்து அறிவின் இடமறிந்து நீங்கள் அறிவீர்களானால் அறிவே உரசி உரசி அறிவையறிய வைப்பதும் நமது அறிவின் பொக்கிஷமே.

எல்லாவற்றையும் உருவகப்படுத்திச் சொல்லுவது அறிவு. கொள்ளுவதும் தள்ளுவதும் அறிவே. அலங்காரத்தைச் செய்து முடிப்பதும், அதைப்பார்த்து ஆனந்திப்பதும் அறிவே. இருக்கவும் எழுந்திருக்கவும், நடக்கவும், உழைக்கவும், ஊக்கமூட்டுவதும் அறிவே. தன்னை மறந்ததும், பின் விழித்ததும், தெளிந்ததும், நல்லவை கெட்டவை என்பனவற்றைப் பாகுபடுத்தி, கொள்ளுவன வற்றைக் கொள்ளுவதும், தள்ளுவனவற்றைத் தள்ளுவதும், மேல், கீழ் நிலையாவதும் அறிவே. நினைப்பு என்னும் அரூபியில் நினைத்த பொருள்களை, ரூபத்தில் தோற்றுவிக்கும் ஆற்றல் அறிவிற்குத்தான். உதாரணமாக, இவ்வுலகின்கண் உள்ள பிரமாண்டமான கட்டடங்களும், மனதிற்கு இன்பமளிக்கும் பூங்காவனங்களும், கவர்ச்சியுள்ள சித்திரப்பதுமைகள் நிரம்பிய கோபுரங்களும், கோவில்களும், மலைகளிலும், குகைகளிலும் கருங்கல்லில் செதுக்கப்பட்ட உயிருள்ளவை போன்று தத்ரூபமாகவும், அழகாகவும், லாவண்யமாகவும், செதுக்கப்பட்ட சிலாரூபங்களும், மற்றும் மனதை இன்பத்தில் ஆழ்த்தும் ரம்மியமான

கைத்திறனைகொண்ட சிற்பிகளின் வேலைப்பாடுகளும், பாவைகளும், பலவர்ணங்களோடு தீட்டிய மந்தஹாஸமான ஓவியங்களும், அறிவின் பேராற்றலால்தான் உண்டாயின. காதால் கேட்டும், கண்ணால் கண்டும், யூகத்தைக்கொண்டும், பற்பலப்பொருள்களை அவை போன்று தத்ரூபத்தில் கண் கூடாகக் காட்டுவதும் அறிவே. மனிதனை நல்வழிப் படுத்துவதும் தீயவழிப்படுத்துவதும், பிறவிக்கு ஆளாக்கு வதும், பிறவியை அறுப்பதும், மோட்ச சாதனத்தை அடைய வைப்பதும் எது? அது நம் அறிவே. மூளையில் அணுக்கள்ாய் நிரம்பி யிருப்பதும் நம் அறிவுதான். இந்த அறிவின் பேராற்றல்தான் பேரறிவு.

அறிவு உயிரின் மந்திரி. பிறகு உயிராகிய ஆத்மாவின் நிர்வாகி. ஆதியின் தத்துவங்களில் ஐந்தாவது தத்துவ மாகிய ஆயிரத்தெட்டு மலரிலிருந்துதான் அறிவு பிரிகிறது. இந்த அறிவு நினைவாயிருக்கும் உயிருக்குப் பிரகாசக் கண்ணாகும்.

நினைவாகிய உயிர் ஓர் அரசாங்க நிர்வாகத்தில், அரசனைப் போன்றது. ஆனால் அறிவோ, இராணுவ பலத்தை ஒத்தது. சாதாரணமாகக் குடிஜனங்களும் மற்றும் பல நிர்வாகஸ்தர்களும், அரசனுக்குப் பயந்தாலும் பயப்படாவிட்டாலும், இராணுவத்தின் பலத்திற்கு அடங்கி ஒடுங்கிப் பயந்து நடக்கிறார்கள். இராணுவ மில்லையேல் அரசனின் பெருமையில்லை. அறிவில்லையேல் உயிரின் மேன்மையில்லை. ஒரு அரசாங்கம் அழிக்கப் படுவதும், ஆக்கப்படுவதும், அதிகப்படுவதும் இராணு

வத்தின் பலத்தை ஒட்டித்தான். ஒரு அரசனுக்கும், அவனது அரசாங்கத்திற்கும், மரியாதையையும், புகழையும் அளிப்பது இராணுவமே. ஒரு அரசாங்கம் வீழ்வதும் இராணுவத்தின் வீழ்ச்சியேயாகும். அதே போன்று அறிவு அணுக்கள் தோல்வியுற்று மறதியுற்றால் மரணம் என்னும் பெருவீழ்ச்சி ஏற்படுகிறது.

ஆத்மாவானது அறிவைக் கைக்கொண்டவுடன் காரணசரீரம் ஆகிறது. காரணசரீரம் என்பது அறிவு அணுக்களின் சேர்க்கையே. இந்தப் பேரறிவின் இருப்பிடம் நம் தேகத்திலும் உண்டு. அது நமது சரீரத்தில் உச்சியென்று சொல்லும் ஸ்தானம்தான். ஆனால் அதைக் கண்டுவிட ஆசைகொண்டு முயற்சி செய்யாதீர்கள். அதனாலாகும் கெடுதிகள் என்னவெனில் மூளை கெட்டுவிடும், பைத்தியமும் ஏற்படலாம் அல்லது மரணமும் ஏற்படலாம். ஆனால் இதையறிந்த அனுபவமுள்ள குருவினிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுவது அவசியம்.

"எட்டாத தற்பரத்தை எட்டி எட்டி உட்புரமாய், உட்சென்று உற்று நோக்க நோக்க, அப்பரமும் இப்பரமும், ஏக பராபரமும் என்னுள் நான் அறிந்தேன்"

எந்தச் சமாசாரத்தையும், அறிந்துகேட்டு நிர்வகித்துப் பற்பலத் துறைகளில் எண்ணத்தைச் செலுத்துவதறிவே.

ஆனால் ஓரிடத்தில் லயித்திருப்பது மட்டும் ஆத்மா.

இந்தப் பரிசுத்த ஆத்மா ஆயிரத்தெட்டு மலரில் தங்கினதும், அறிவுடன் உறவாடுகிறது. உறவாடி

உறவாடித் தன் ஏக்கத்தை அறிவினிடம் ஒப்புவித்ததும் சூக்குமமாகிப் பின் ஸ்தூலமாகிறது. ஆறறிவு கடந்து, ஏழாவது அறிவில் நின்று, எட்டாவது அறிவைக்கண்டு பிடித்தால்தான் ஒருவர் அறிவுபற்றிப் பேசலாம்.

அறிவின் சாமார்த்தியமும் துணிவுமேதான் அரசாங்கம். உலகில் அறிவானது பலவித மூடக் கொள்கைகளில் மூடிக்கிடக்கிறது. யாரால் என்பதை ஆராயப்புகுந்தால் சில மதக் குருக்களால்தான் என்பது உங்களுக்கு நன்கு விளங்கும்.

எவன் அறிவின் அறிவால் அறிவை ஜெயிக்கிறனே அவனே அறிவாளி. அறிவின் முதிர்ச்சி பேற்பட்டால் எந்த மதக் குருக்களும் இவ்வறிஞனுக்கு அடிமை. அறிவின் பொக்கிஷத்திலிருந்துதான் அன்பும், கருணையும் ஏற்படுகின்றன. யதார்த்த பொக்கிஷமிருந்தால் எதற்கும் ஈடில்லை. அறிவுதான் மானம், மரியாதை மற்றும் பல பழக்க வழக்கங்களைச் சிருஷ்டித்தது. அறிவின் அறிவே மதம், சட்டம், அரசன் எல்லாவற்றையும் சிருஷ்டித்தது. அறிவானது இந்த உலகத்திலுள்ள குணங்களை எல்லாம் சரியென்று ஒப்புக்கொண்டு எந்த விதக் குற்றமுமில்லாது பேரறிவுக்குக்கொண்டு போவதையே தன் தன்மையாகக் கொண்டது.

எத்தொழிலிலும் அறிவின் அபிவிருத்தி உண்டு. அறிவுடையோர் எத்தொழிலிலும் இருப்பர். ஆனல் அத்தொழில் அவரைச் சாராது.

நினைவினிடத்தில் நினைவை நினைத்து, நினைவை நிறுத்தி, நினைவைச் சுழற்றி, நினைவில் நிலைத்து, நினைவாய் நினைவில் நினைவோடு நின்ற நினைவும் நானே.

ஒன்றுமுதல் ஆறறிவு உள்ள எல்லா ஜீவன்களுக்கும் தத்தம் தாரதம்யத்திற்குத் தக்கவாறு அறிவு உண்டு. ஆறறிவையும் பழகிய பின்தான் ஏழாவது அறிவிற்குச் செல்லவேண்டும். ஒவ்வொரு அறிவுடைய பொருள்களும், தத்தம் ஏக்கத்தை முடித்தே தீருகின்றன. ஏக்கத்திற்குத் தக்கவாறு அறிவு அணுக்கள் உழைக்கின்றன.

முன்னே கூறப்பட்ட இந்த அறிவின் பேராற்றலால் ஏற்பட்ட இந்த ஸ்தூல வியாபகம், நம் பொக்கிஷத்தில் இருக்கும்போது யார் அறிய வேண்டுமென அறிவை அண்டினார்களோ அவர்கள் அறியாமற் போனதில்லை.

நம் நாட்டத்திற்கு, கைநொடிக்குமுன், தாஸனாகக் குற்றேவல் செய்யக் காத்திருப்பது அறிவு. கட்டி முடிந்தவைகளையும், அழிந்தவைகளையும், பின் தோன்றினவைகளையும் ஒன்றும் தப்பாது, தன்னிடம் குறித்துவைத்துக் கொள்ளும் பான்மை அறிவினிடந்தான்.

அறிவினின்று பிரிந்து ஆத்மா வெட்டவெளியில் செல்கிறது. அறிவை அறிந்து அறிவை அனுபவித்து அறிவின் பொக்கிஷம் அறியாதவரை பிறவி உண்டு. அறிவிற்குத்தான் பிறவியே யொழிய, ஆத்மாவிற்குப் பிறவியில்லை. ஆத்மா தனி, அறிவு தனி, ஆத்மா தன் ஏக்கத்திற்குத் தக்கபடி அறிவைச் சிருஷ்டித்து அதனிடம்

கூடிப் பிறகு அதைவிட்டுப் பிரியமுடியாதபடி பந்தப்படுவதினுல் பிறவி ஏற்படுகிறது.

அறிவைப் பரிசுத்தமாக்கி ஞானம் அடைந்த ஒருவர் தன் பெயரை அழித்துக்கொள்ளுவதுதான் முக்தி. சரீர அணுக்களும் அழிவதில்லை. சரீரத்தை எரித்தாலும் அல்லது புதைத்தாலும், அந்தச் சரீர அணுக்கள் பிரிந்து உலகத்திலுள்ள மற்ற சரீரங்களிலுள்ள அணுக்களுக்கு ஒத்தாசையாய் அவைகளோடு கூடிக்கொள்கின்றன. சரீரம் தனி, ஆத்மா தனி, அறிவு தனி. ஆத்மாவின் முடிவு என்பது பரமாத்மாவுடன் ஐக்யமாவதுதான். ஆதியின் ஏக்கம்தான் உலக சிருஷ்டி. அறிவின் அலங்காரமே உலகத்தின் நாகரீகம். அறிவின் சமர்த்திணல்தான் பறப்பதும், பற்பல நுட்பங்களைச் செய்து முடிப்பதும். அறிவின் ஓய்வே தூக்கம். அறிவின் உடல் மறதியே மரணம்.

ஆத்மாவானது அறிவின் குணம் மாயை முதலிய பந்தங்களில் கட்டுப்படுகிறது. அறிவின் பிரகாசமானது இவ்வுலக மாயையென்னும் பாசங்களால் புகைபடுகிறது. நாம், அதுபற்றி மனதைக் கேட்போமாகில் அது அறியவில்லையென்று சொல்லும். பக்தியின் நன்மை தீமைகளை அறிவது அறிவு. ஆத்மாவுக்கு ரூபமில்லை. அறிவினிடம் பந்தமடைந்ததும், தான் ரூபமெடுக்கிறது. மனிதன் என்று நாம் பேரிட்டுச் சொல்லும் ஒருவித ரூபமானது, ஆத்மாவும், அறிவும் பலகுணங்களைக் கொண்ட பின்புதான்.

அறிவில்லாத ஒருவித மக்களும் இவ்வுலகில் உண்டு. உதாரணமாக மலைப்பள்ளியர் என்னும் ஒருவித மனித வர்க்கத்தினரை எடுத்துக்கொள்ளலாம். அந்த மனித மக்களிடமும் ஒருவித அறிவு உண்டு. அவர்களுக்கும் பிறவி உண்டு. சில அறிவுடையோர்களுக்கும் பிறவி உண்டு. ஏனென்றால் அவர்களது சொல் ஒன்றும் செய்கை ஒன்று மாக ஒன்றுக்கொன்று முரண்பாடாக யிருப்பதனால்தான் அவர்கள் அறிவைச் சிருஷ்டித்து, அதற்கு மாற்றம் செய்வ தாலும், அவர்களது செய்கை மாறுபட்ட செய்கை யென்பது பிறருக்குத் தெரிவதாலும், அதனால் பிறர் குறைபட அக்குறை நிவர்த்திசெய்ய அவர்களுக்கும் பிறவி உண்டு. பிறவியெடுத்து ஒருவன் குற்றம்செய்தால், அவன் மறு பிறவியில் 'மாடுபடா பாடுபடுவான் தான் பார்' என ஒரு சமயம் கூறியுள்ளேன்.

தவம், ஒழுக்கம் எல்லாம் அறிவின் ஒழுக்கமே. சரியை கிரியை, யோகம் எல்லாம் அறிவை அறிவதற்கே. ஆத்மா எப்போதும் பரிசுத்தமானது. அது மாசானது அறிவின் பிரகாசக் குறைவால். சாதாரணமாக மனிதமக்களுக்கு அறிவு ஆறு, யோகிகளுக்கு அறிவு ஏழு, ஞானிகளுக்கு அறிவு எட்டு.

செலவில்லாப் பொருளும் அன்பில்லாவாழ்வும்
அருளில்லாமுகமும் கருணையில்லாக் கண்ணும்
குறையுணரா அறிவும் அனுபோகமில்லாச்சொல்லும்
கருஇல்லாத்தவமும் குருஇல்லாஉடம்பும்
குறைமுடிப்பரோ?

இப்பொழுது சித்தர் உலகம் நடைபெறுகிறது. இக்காலத்தில் சித்து விளையாடுவது கூடாது. சித்து விளையாட வேண்டுமென்று எண்ணங்கொண்டவர்களின் விளையாட்டுகள் $3\frac{3}{4}$-நாழிதான். மந்திரங்களின் சக்தி கொண்டும், மற்றும் மனோவசியம் முதலியவைகளின் சக்தி கொண்டும், ஒருவர் செய்யக்கூடிய அதிசயம் 3-$\frac{3}{4}$நாழியே. சித்தை இன்னதெனத் தெரிந்த ஞானிகள், விளையாட மாட்டார்கள். சித்து என்பது முழுசக்தியில் பதினு யிரத்தில் ஒரு பங்காகும். அதுவுமன்றி அவர்களுக்கு இவ்விளையாட்டுகள் ஒரு பொருட்டுமல்ல. உலகை ஏமாற்றுபவர்கள்தான் இம்முறைகளைக் கையாளுவார்களே தவிர, மற்ற கடந்த ஞானிகள் இதைச் சிந்திக்கக்கூட மாட்டார்கள். அவர்களின் கவலை இதுவுமல்ல.

எல்லா மதங்களும், பேரறிவைக் காண அவாவுறு கின்றன. எல்லா மதத்திலும் முக்தி உண்டு. நீங்கள் சரியாகக் கூர்ந்து கவனிப்பீர்களானல், ஒரு மதத்திலாவது பிசகு என்பதே கிடையாது. தானக அனுபோகத்தில் பார்த்தால் எல்லாம் உண்மையென்பது விளங்கும். தன் அறிவின் பலஹீனமுடையவனும், பொருமை யிழந்த வனுமே மதம்விட்டு மதம் மாறுவான். அறிவின் பொக் கிஷமிருந்தால், எல்லா மதத்தின் பொக்கிஷங்களையும், நன்மைகளையும் கிரகித்துக்கொள்ளலாம்.

ஒரு மனிதன் குரு என்று வெளிவந்த பின்பு, வேற்றுமையும் பாகுபாடும் உடையவனயிருப்பின் அவன் குருவாக மாட்டான். புஸ்தகப்படிப்பினலும் ஒருவனை

அறிவு அபிவிருத்தி அடையலாம். புஸ்தகப் படிப்பினுல் அறிவை அறிய ஒருவர் அடையக்கூடிய பயன் எவ்வள வென்ருல், தேனைப் பார்க்காமுன் தேன் என்ற பெயர் தெரிந்துகொண்டு பின் தேனைப்பார்த்தபின் தேன் என்பது இதுதான் என்று பார்வையளவில் தெரிந்துகொள்வதைப் போன்றது. ஆனுல் அனுபவத்தில் அறிவைக்காண்பது எப்படியென்ருல் தேனைக்கண்டு, கையால் எடுத்து, ருசி பார்த்துச் சுவைத்து அதன் தன்மை, ருசி, மணம் முதலியவைகளை நன்ருக அறிந்துகொள்வதை ஒக்கும். ஆகையால் கண்டிப்பாய் அனுபவம் வேண்டும்.

ஆயிரத்தெட்டு மலரின் வேகமே, அணுக்களாய்ப் பிரிந்தது. சுவை இவைகளோடு தோற்றம், நிறம் இவை களுக்கு மற்றும் வேண்டிய அணுக்கள் பிரிகின்றன. ஒவ்வொரு அணுவிலும் இருள், ஆதி, நாதம், சோதி, காரணம் என்னும் இவ்வைந்தும் பிரிக்கமுடியாத ஒரு நிலையில் கலந்திருக்கின்றன. இந்த ஆயிரத்தெட்டு மலரி லிருந்துதான் பேரறிவின் ஆதியும் அந்தமும். அங் கிருந்தே தோன்றி, வந்து, அங்கேயே போய் முடிகிறது. அங்கிருந்துதான் முதல்பிறவி ஆத்மாவுக்கு ஏற்படுகிறது. (சித்தர்கள் அல்லது அவர்களுக்குச் சமானமானவர்கள் அங்கு தூங்குகிருர்கள் அல்லது இளைப்பாறுகிருர்கள்) பிறப்பு எடுக்கும் புதிதான ஆத்மாக்களுக்குத்தான் வேலை. உலகத்திற்கு வந்து சற்காரியங்களைச் செய்து அதன் பயனுக அந்த இடத்திற்குச் சென்றவர்கள்தான் சித்த ரெனப்படுவர். ஆனுல் உலகில் நல்லடியாரெனப் பெயர் எடுத்தவர்கள் அநேககாலம் இங்கு இளைப்பாறிப் பிறகு

தருணம் பார்த்து, நல்ல மனிதர்களாக இப்புவியில் பிறந்து தமது பிறவியின் பெருமுடிச்சை அறுக்கிறார்கள்.

முதலில் வரும்போது, இந்த ஆத்மாக்கள், அறிவினோடு சிநேகம் கொண்டாடிக் காரணசரீரம் எடுக்கிறது. காரண தேகத்துடன், சூக்ம சரீரத்தையும் ஆத்மா அடைகிறது. இந்த இரண்டு சரீரங்களையும் கொண்ட ஆத்மாக்கள் தான் தேவர்கள் எனப்படுவர். சூக்ம சரீரமானது இளநுங்கு அல்லது பளிங்குநிறமுள்ளது. அதை நாமும் பார்க்கலாம். இந்த தேவர்களை நாமும் பார்க்கலாம். இவர்களுக்குக் கண்ணிமையா நாட்டார் என்றும் பெயர். இந்தத் தேவர்களுக்கு மனிதர்களாகிய நம் ஒத்தாசை வேண்டும். ஆனால் இவர்கள் காரண லோகத்திலிருந்தால் அது தேவையில்லை.

அறிவு என்பதுதான் காரணதேகம். நம் உடலின் ஒரு பாகத்தில் அடிபட்டால், அடிபட்டது ஸ்தூலத்திற்கு, ஆனால் வலி சூக்குமத்திற்குத்தான். அதைச் சொல்லுவதும் காரணசரீரம் தான். இந்தக் காரண சரீரம் காணமுடியாத மகா நுட்பமான அணுக்களால் ஆகியது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்லுவது பொருத்தமுள்ளதாகும். லம்பிகாயோகம் என்ற சமாதி நிலையிலிருப்பவர்களுக்கு ஆத்மா என்னும் உயிரடங்கிக் கிடக்கிறது. அறிவும் தன் ஆற்றல் இழந்து ஒடுங்கிக் கிடக்கிறது. அறிவின் ஆற்றல் இல்லாததால் கோடானு கோடி வருஷம் இவர்கள் சமாதியிலிருந்தாலும் இவர்கள் சரீரம் அழிவதில்லை. வயதும் பிறவியும் அறிவிற்கே.

ஆதலால், அறிவு அடங்கிச் சக்தியற்றுக் கிடப்பதால், சவத்திற்காவது ஒருவித பிரயோஜனம் உண்டு, அப் பிரயோஜனமும் இவர்களுக்குக் கிடையாது. அதனால் இவர்களும் எவ்வித பிரயோஜனமும் அடைவதில்லை. இவர்கள் அறிவின் துரோகியேயாவார்கள். இதைத்தான் முன்னோர்கள், செத்தவர்களை யெழுப்பலாம் என்று சொன்னது. ஆனால் சொன்னவர்களின் கருத்து இந்த மாதிரி லம்பிகாயோகத்தில் அறிவைச் சாகக்கொடுத்த வர்களை எழுப்பலாம் என்று சொன்னார்களே தவிர, உயிரில்லாத பிரேதத்தை எழுப்பமுடியுமென்று சொல்ல வில்லை. இதையறியாத மக்களிடம் அவர்கள் பட்டபாடு அநேகம். ஆகையால் அரசாங்கம் ஒத்துழைக்க முன்வருமாகில், இந்தமாதிரி லம்பிகாயோகத்தில் இறந்த வர்களைத் திரும்ப உயிருடனும், அறிவுடனும், இச்சபை யோர்களும் எழுப்பலாம். இதை அதிகம் விவரிக்கப் புகின் விரியும் ஆதலின் யோசிக்க.

மறதியாயுள்ள மரம், செடி, கொடிகளுக்காவது வளர்ச்சியுண்டு. அவை வளர்ந்து, பூத்துக் காய்க்கும் தன்மை உடையன. ஆனால் மறதியாயுள்ள அறிவிற்கு எவ்வித வளர்ச்சியும் எப்போதும் இல்லை.

தன் உடலிலுள்ள அழுக்கைத் தன் கையால் சுத்தம் செய்கிறோம். ஆனால் கையிலுள்ள அழுக்கைச் சுத்தம் செய்வது எது ? அதுவும் தன் கையே. அதேபோல பிறருடைய குற்றத்தை அறிவாளிகள் அறிந்து தன் முயற்சியால் அதைச் சுத்தம் செய்ய முடியும்வரை

செய்வதோடு தன் குறைகளைத் தானே உணர்ந்து நிவர்த்தி செய்துகொள்வது பெரும் உத்தம நிலையாகும்.

அறிவின் அலங்காரமே ஆத்மாவின் சிறப்பாகும். அறிவின் திருத்தமே ஆத்மாவின் திருப்தியாகும். அறிவின் உயர்வே ஆத்மாவை அறிய வழியாகும். அறிவின் தன்ம்மையே ஆத்மாவின் கற்பும், மானுபிமானமுமாகும். அறிவுடைய பெண் கற்பழிந்தால் குற்றம் ஒன்றுதான். ஆனால் அறிவுடைய ஆண்கள் கற்பழிந்தால் குற்றம் அநேகம். அறிவையறியா அறிவை அறிய பிறவி அநேகம். அறிவை அறிந்து, அறிவை அனுபவிக்கப் பிறவி அநேகம். அறிவை அறிந்தபின், அறிவின் குற்றத்திற்குப் பிறவி அநேகம். அறிவை யறிந்து அறிவினிடத்தில் அறிவோடிருந்தவர்களுக்குப் பிறவி ஒன்றே.

அறிவை அறிவது மேல். அதற்குமேல் அறிவைக் கொண்டு அறிவைச் சமாதானப்படுத்துவது மேல். பின் அறிவுக்குள் புகுந்து அறிவின் இடமறிந்து அறிவாய் இருப்பது மேல். இதன் பயன்: அறிவே அறிவாய், அனுபோக மயமாய் ஐக்யமாவதே முக்தி.

கவனத்தில் வைக்கவேண்டிய விஷயங்கள்:—

1. வீண் ஆடம்பரத்தைச் சுருக்கி அறிவை விருத்தி செய்துகொள்ளுவது உண்மை நிலை.
2. வெளியில் உள்ள பக்தியைவிட உள் பக்தியே சிறந்தது.
3. தேடும்வரைத் தேடிக் கிடைத்தபின் அதைப் பாது காப்பதுவே உத்தமம்.

4. தூங்குமட்டும் தூங்கினாலும் உணர்வோடு தூங்கி னால் அதுவே துக்கமற்ற தூக்கமாகும்.

உலகநல்லடியார்களே!

நடுப்பகலும் நடுநிசியும் அதிக நேரம் நிலைப்பதில்லை. அதேபோல் உலகத்தின் நெருக்கடியும் மனிதர்களின் துன்பங்களும் அதிக காலம் நிலைத்திருக்கா.

வறுமையில் பொருமையுள்ளோர் வல்லவர் ஆவார்.

புகை, போதை பிறரைக் குறை சொல்லுகிறவர்களும், தன் மத ஒழுக்கத்தையும், குரு சொல்லையும், மீறி நடப்ப வர்களும் இப்பரிபூரண பரஞ்சோதியின் உயர் ஞான சபையின் பெயரைக் கேட்ட உடனேயாவது அல்லது இச்சபையிலுள்ள சிஷ்யர்களை நினைவில் நினைத்த மாத்திரத் திலாவது திடுக்கிட்டுத் தன் குற்றங்களை யோசித்து நன்மைக்கு ஆளாகிறார்கள். ஆவார்கள்.

மெய்யுணர்வாளர்களே! மதியுடையவர்களே!! மதியைக்கொண்டு விதியை வென்றீர்கள். விதிப்பொருளை மதியின் இருப்பிடத்தில் வைத்து, அப்பொருளை மெய் உணர்வாய், அவ்வுணர்வைப் பாதுகாத்து வருகிறீர்கள் என்ற சந்தோஷச் சிறப்புடன் இன்று பிரசங்கம் முடிவுற்றது.



1. ஒருகண் திறந்தது இருகண் சிரித்தது
இக்கண் குளிர்ந்தது இருதயக் கண் மகிழ்ந்தது
அறிவுக்கண் அறிந்தது, மூலக்கண்ணின்
மூலப் பொருளால்.

2. அன்பு நிறைந்தது அருள் சொரிந்தது
அறிவு விரிந்தது கரு உறைந்தது
கனல் மீறியது கடத்தினுள்ளோர்
சிறு இடம் கிடைத்தது
கண்டதும் யான் கொண்டதும் யான்
அதனுட் புகுந்து இருப்பதும் யான்
விண்டதும் யானே.

3. தித்திக்குந் தேன் இருக்கு மிடந்தேடி ரீங்கார வண்டு செல்வதுபோல் அறிவுடையோர் உயர் ஞான உயிர்ப்பொருள் உணர்வைத் தேடி அடைவர்.

4. தொட்டேன், தொட்டுத் தொட்டு எல்லாம் விட்டேன், விட்டு பின் ஒன்றை தொட்டேன்,
அதை விடமுடியா மேல்நிலை சென்றேன்,
அது எது? அதுவே எந்நிலை - உணர்வு.

5. இருகண் நேர்விழித்து ஒருகண்ணினுள் நிலைத்து,
முக்கண்ணின் கருத்தும் கருவும்முடிமேல் தரிக்க,
தரித்தபயன், எந்நிலை நான் அடைந்தேன்.

பரஞ்ஜோதி மஹான் அருளிய
"எந்நூலுக்கும் இந்நூலே மூலம்" என்ற
உயர்ஞான நூலில்

1. ஒருமொழி.
2. பேரறிவு.
3. பரஞ்ஜோதி.
4. ஞானக்கண்.
5. ஆதியும் உலக இணைப்பும்.
6. ஆருதாரமும் அமிர்தமும்.

அச்சில் :—

1. பூதலோகம்.
2. உணர்வும் தவக்கனலும்.
3. நடந்ததெல்லாம் நன்மைக்கே.
4. சந்தோஷம்.

ஷை புத்தகங்கள் கிடைக்குமிடம்:—

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
நிர். 1, மேல வடம்போக்கித் தெரு, மதுரை.

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
33, கும்மாளம்மன்கோயில் தெரு,
தண்டையார்பேட்டை, சென்னை.

ஷை சபை, நிர். 1, பில்கிங்டன் ரோடு, பெரம்பூர்.

ஷை சபை, நிர். 30, நம்மாழ்வார் செட்டித்தெரு, சூளை.

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
ஜஸானி பவான் மட்டுங்கா, பாம்பே 19.

பரிபூரண பரஞ்ஜோதியின் உயர்ஞான சபை,
கீழரத வீதி, சொக்கலிங்கபுரம், அருப்புக்கோட்டை.

எல்லா புஸ்தகக் கடைகளிலும் கிடைக்கும்.